| Sl. No. | Song | Scale | Song No. |
|---|---|---|---|
| 1 | அழகானவர் இயேசு அழகானவர் | F | 037 |
| 2 | அழைத்தவரே அழைத்தவரே | G | 036 |
| 3 | ஆயிரங்கள் பார்த்தாலும் | E | 051 |
| 4 | இதுவரை நடத்தி குறைவின்றி காத்து | Fm | 008 |
| 5 | இதோ மனிதர்கள் மத்தியில் | A | 007 |
| 6 | இயேசுவே உம்மை உயர்த்திடுவேன் | D | 027 |
| 7 | உங்க கிருபை இல்லாம வாழ முடியாதையா | Cm | 063 |
| 8 | உந்தன் சமுகத்தில் வரும்போதெல்லாம் | C | 024 |
| 9 | உம் அழகான கண்கள் என்னை கண்டதாலே | E | 044 |
| 10 | உம் அன்பிற்கு இணை ஏதும் இல்லை அப்பா | D | 060 |
| 11 | உம் நாமம் எத்தனை இன்பம் | D | 028 |
| 12 | உம்மாலே எல்லாம் கூடும் | A | 043 |
| 13 | உம்மை பாடாத நாட்களும் இல்லையே | Em | 062 |
| 14 | உம்மை போல இந்த உலகிலே | A | 022 |
| 15 | உம்மை விட நான் வேறு யாரை நம்புவேன் | Gm | 034 |
| 16 | உம்மைவிட வேறு யாரிடம் | Cm | 023 |
| 17 | உம்மை நம்பி வந்தேன் நான் வெட்கப்படல | Fm | 029 |
| 18 | உம்மைப் போல யாருண்டு | D | 049 |
| 19 | உயரமும் உன்னதமுமான | C | 025 |
| 20 | உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை | E | 067 |
| 21 | உனக்காகவே நான் காத்திருக்கிறேன் | E | 042 |
| 22 | எருசலேமே எருசலேமே | G | 045 |
| 23 | எல்லாமே முடிந்ததென்று | G | 048 |
| 24 | எனக்காய கதறும் என் இயேசு நல்லவரே | D | 004 |
| 25 | எனக்கு உம்மை விட்டா யாரும் இல்லப்பா | C | 031 |
| 26 | என் சிறுமையை கண்ணோக்கி பார்த்தவரே | Fm | 052 |
| 27 | என் தேவனால் முடியாதது ஒன்றுமில்லை | C | 002 |

| | | | |
|---|---|---|---|
| 28 | என் பிரியமே என் ரூபவதி என்ன வேண்டும் | C | 003 |
| 29 | என் தனிமையில் என் வேதனையில் | C | 047 |
| 30 | என்னை உம் கையில் | G | 005 |
| 31 | என்னை வல்லடிக்கு நீக்கி உம் கரங்களால் | F | 006 |
| 32 | என்னை கண்டார் (இயேசு) என்னை கண்டார் | A | 038 |
| 33 | எஜமானனே எஜமானனே | A | 030 |
| 34 | ஒருவரும் சேரா ஒளியினில் | F | 015 |
| 35 | ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் | C | 016 |
| 36 | ஒ எந்தன் உள்ளம் நீர் வந்ததால் | G | 039 |
| 37 | கலங்கின நேரங்களில் கை தூக்கி எடுப்பவரே | G | 010 |
| 38 | கர்த்தர் தாமே நம் முன்னே போவார் | E | 033 |
| 39 | கல்வாரி சிநேகம் கரைத்திடும் என்னை | A | 040 |
| 40 | சிலுவை அன்பை உணராயோ | C | 061 |
| 41 | சிலுவை நாதர் இயேசுவின் | C | 019 |
| 42 | சொந்தம் என்று சொல்லிக் கொள்ள | Fm | 020 |
| 43 | சேராபின் தூதர்கள் | A | 065 |
| 44 | தனிமையின் பாதையில் | Dm | 064 |
| 45 | தாயினும் மேலாய் என்மேல் அன்பு | G | 054 |
| 46 | துதிப்பேன் உம்மை துதிப்பேன் | C | 021 |
| 47 | தூக்கி சுமப்பீரே வாழ்நாளெல்லாம் | G | 055 |
| 48 | தேவகுமாரா தேவகுமாரா என்ன நினச்சிடுங்க | D | 046 |
| 49 | தேவனே என்னை தருகிறேன் உம் | C | 001 |
| 50 | நல்லவரே என் இயேசுவே | A | 011 |
| 51 | நம்பிக்கையுடைய சிறைகளே | Fm | 059 |
| 52 | நன்றி சொல்லி உம்மை பாட வந்தோம் | C | 050 |
| 53 | நான் ஆராதிக்கும் இயேசு இன்றும் | F | 012 |
| 54 | நான் ஒருபோதும் உன்னை கைவிடுவதில்லை | G | 013 |
| 55 | நான் நிற்கும் பூமி நிலைகுலைந்து | E | 058 |
| 56 | நிறைவான ஆவியானவரே | A | 032 |

| | | | |
|---|---|---|---|
| 57 | நீர் எனக்குப் போதும் | F | 035 |
| 58 | நீர் திறந்தால் அடைப்பவன் இல்லை | Fm | 041 |
| 59 | நீரே எல்லாம் நீரே எல்லாம் | Dm | 014 |
| 60 | நேசப் பாட்டு பாடப்போறேன் இயேசைய்யா | C | 066 |
| 61 | பரம குயவனே என்னை வனையுமே | E | 017 |
| 62 | பரிசுத்தரே எங்கள் இயேசு தேவா | Fm | 053 |
| 63 | பறந்து காக்கும் பட்சியைப் போல | C | 056 |
| 64 | புயல் காற்றை பூந்தென்றலாய் | F | 057 |
| 65 | பெந்தேகோஸ்தே அனுபவம் தாருமே | C | 018 |
| 66 | வாக்குரைத்தவரே நீர் உண்மையுள்ளவரே | A | 026 |
| 67 | ஜீவன் தந்தீர் உமை ஆராதிக்க | F | 009 |
| 68 | | | |
| 69 | | | |
| 70 | | | |
| 71 | | | |
| 72 | | | |
| 73 | | | |
| 74 | | | |
| 75 | | | |
| 76 | | | |
| 77 | | | |
| 78 | | | |
| 79 | | | |
| 80 | | | |
| 81 | | | |
| 82 | | | |
| 83 | | | |
| 84 | | | |
| 85 | | | |

**Song No. - 001 Scale – C** **INDEX**

தேவனே என்னை தருகிறேன் உம்
பாதத்தில் என்னை படைக்கிறேன்
யாவையும் நீர் தந்ததால்
உம்மிடம் திரும்ப தருகிறேன்

எந்தன் வாழ்வின் மேன்மை எல்லாம்
உந்தனுக்கே தருகிறேன்
எங்கள் ஆராதனை உமக்கே
எங்கள் வாழ்நாளெல்லாம் உமக்கே

ஊழியம் நீர் தந்தது
உயர்வுகள் நீர் தந்தது
மேன்மைகள் நீர் தந்தது
செல்வமும் நீர் தந்தது

தரிசனம் நீர் தந்தது
தாகமும் நீர் தந்தது
கிருபைகள் நீர் தந்தது
அபிஷேகம் நீர் தந்தது

**Song No. - 002** **Scale - C** **INDEX**

**என் தேவனால் முடியாதது ஒன்றுமில்லை**
**தன் நாமத்தினால் கூடுமே எல்லாம் எல்லாம்**
**வல்லவர் சொன்னால் எல்லாம் ஆகும்**
**இல்லை வேறில்லை நாமம்**
**வன்மதில் போல் உள்ள துன்பமும்**
**வன் கரத்தால் நீங்கிடும்**
**நேர்மையின் வழியில் நடந்தால்**
**நன்மைகள் தினமும் தருவாரே**
**உண்மையுள்ளவர் நீதிமான் கர்த்தர் மேலானவர்**

**என் இயேசுவின் நாமத்தால் குணமாகாததா**
**கொடும் வியாதி ஏதுண்டு இல்லை இல்லை**
**வசனம் விடுதலை தந்திடும் விண்ணப்பம் கேட்பவரே**
**குழம்பும் இதயத்தை காண்பவர் புதிய வழிகாட்டுவார்**
**வழுவாமல் என்றும் தாங்குவார்**
**தம் வலுவான கரங்களால் அணைப்பார்**
**உண்மையுள்ளவர் நீர் தான்**
**சேனைகளின் கர்த்தரே**

**உம்மால் கூடும் எல்லாம் கூடும்**
**கூடாதது ஒன்றுமில்லையே (உம்மால்)**

**Song No. - 003** **Scale - C** **INDEX**

என் பிரியமே என் ரூபவதி என்ன வேண்டும் சொல்
இயேசு மணவாளனின் இன்ப மார்பு போதுமே
அதில் சாய்ந்துறவாடும் வாழ்வு வேண்டுமே

முள்ளுகளுக்குள் லீலி புஷ்பம் நீதான்
ஸ்திரீகளுக்குள்ளே பிரியமானவளும் நீதான்
என் நாமத்துக்காக நொறுக்கப்பட்டவளும் நீதான்
உன்னை என் மணவாளியாய் ஏற்றுக்கொண்டேனே

பள்ளத்தாக்கின் லீலி புஷ்பம் இயேசுவே
குமாரருக்குள் பிரியமானவரும் இயேசுவே
என் பாவத்துக்காக நொறுக்கப்பட்டவரும் இயேசுவே
உம்மை என் மணவாளனாய் ஏற்றுக்கொண்டேனே

ஆத்தும நேசரை தேடி அலைந்தவள் நீதான்
விடாது அவரை பற்றிக்கொண்டவளும் நீதான்
அவர் இருதயத்தை கவர்ந்துக் கொண்டவளும் நீதான்
உன்னை அவர் மணவாளியாய் ஏற்றுக்கொண்டாரே

வெள்ளம் தனியாய் நேசம் கொண்டவரும் இயேசுவே
வலக்கரத்தால் என்னை அணைத்துக் கொண்டவரும் இயேசுவே
முத்திரையாய் என்னை பதித்துக் கொண்டவரும் இயேசுவே
உம்மை என் மணவாளனாய் ஏற்றுக்கொண்டேனே

**Song No. - 004** **Scale – D** **INDEX**

**எனக்காய கதறும் என் இயேசு நல்லவரே**
**எனக்காய் மரித்த என் இயேசு நல்லவரே**
**கஷ்டங்களில் என் (எந்தன்) துணை அவரே**
**கண்ணீரெல்லாம் துடைப்பார்**

**மரணத்தின் பாதையில் நடந்தாலும்**
**மாறாத வாக்கு உண்டு**
**இருள் சூழ்ந்து பாரங்கள் நெருக்கினாலும்**
**இமைப்பொழுதே மறந்தவர்**
**இருக்கின்றவராக இருக்கின்றாரே**
**என்றும் என் ஜெபம் கேட்பார்**

**வியாதியால் சரீரம் வாடினாலும்**
**வல்லமை தாங்கிடுமே**
**ஆதியில் பெயர் சொல்லி அழைத்தவரே**
**ஆற்றுவார் அன்பினாலே**
**பரலோகில் உம்மையல்லால் யார் எனக்கு**
**பூவில் விருப்பம் வேறில்லை**

**என்னை உம் கையில்**
**படைத்தேன் முழுவதுமாய்**
**என்னையும் பயன்படுத்தும்**
**குயவன் நீர் களிமண் நான்**
**உம் சித்தம் நிறைவேற்றுமே**

**தவறிய பாத்திரம் நான்**
**தவறுகள் நீக்கி என்னை**
**தகுதியாய் நிறுத்திடுமே**

**குறைவுள்ள பாத்திரம் நான்**
**குறைவுகள் நீக்கி என்னை**
**கருவியாய் பயன்படுத்தும்**

**Song No. - 006** **Scale – F** **INDEX**

**என்னை வல்லடிக்கு நீக்கி உம் கரங்களால் தூக்கி**
**உன்னதத்தில் வைத்ததை மறப்பேனோ**
**நீர் சொன்னதினால் நான் பிழைத்து கொண்டேன்**
**நீர் கண்டதினால் நான் ஜீவன் பெற்றேன்**

**எந்தன் ஆதரவே எந்தன் அடைக்கலமே**
**எந்தன் மறைவிடமே உம்மை ஆராதிப்பேன்**

**ஆழத்தில் இருந்தென்னை தூக்கி விட்டீர்**
**உயர்வான தளங்களில் நிறுத்தி வைத்தீர்**
**எதிரான யோசனை அதமாக்கினீர்**
**உந்தனின் யோசனை நிறைவேற்றினீர்**

**ஆயிரம் என்னோடு போரிட்டாலும்**
**என்னை மேற்கொள்ளும் அதிகாரம் தரவில்லையே**
**கிருபையினால் என்னை மூடிக்கொண்டீர்**
**நான் தள்ளுண்ட இடங்களில் உயர்த்தி வைத்தீர்**

**கரடான பாதையில் தூக்கிச் சென்றீர்**
**முள் உள்ள இடங்களில் சுமந்து கொண்டீர்**
**எனக்காக குறித்ததை எனக்குத் தந்தீர்**
**நீர் தந்த தரிசனம் நிறைவேற்றினீர்**

**Song No. - 007** **Scale – A** **INDEX**

**இதோ மனிதர்கள் மத்தியில்**
**வாசம் செய்பவரே**
**எங்கள் நடுவிலே வசித்திட**
**விரும்பிடும் தெய்வமே**
**உமக்கு சிங்காசனம் அமைத்திட**
**உம்மை துதிக்கிறோம் இயேசுவே**
**பரிசுத்த அலங்காரத்துடனே**
**உம்மை தொழுகிறோம் இயேசுவே**
**எங்கள் மத்தியில் உலாவிடும்**
**எங்களோடென்றும் வாசம் செய்யும்**

**Song No. - 008** **Scale – Fm** **INDEX**

**இதுவரை நடத்தி குறைவின்றி காத்து**
**மகிழ்வைத் தந்தீரே நன்றி ஐயா**
**தண்ணீரை கடந்தோம் சோதனை ஜெயித்தோம்**
**மதிலைத் தாண்டினோம் உம் பெலத்தால்**

**நன்றி நன்றி ஐயா**
**உம்மை உயர்த்துகிறோம்**

**ஆபத்து நாளில் அனுகூலமான**
**துணையுமானீரே நன்றி ஐயா**

**உம் கரம் நீட்டி ஆசீர்வதித்து**
**எல்லையை பெருக்கினீர் நன்றி ஐயா**

**அபிஷேகம் தந்து வரங்களை ஈந்து**
**பயன்பட செய்தீரே நன்றி ஐயா**

**Song No. - 009 Scale – F INDEX**

**ஜீவன் தந்தீர் உமை ஆராதிக்க**
**வாழ வைத்தீர் உமை ஆராதிக்க**
**தெரிந்து கொண்டீர் உமை ஆராதிக்க**
**உமை எந்நாளும் ஆராதிப்பேன்**

**ஆராதனை ஆராதனை ஆராதனை**
**ஓ நித்தியமானவரே**
**நீரே நிரந்தரமானவர்**
**நீரே கனத்துக்குப் பாத்திரர்**
**நீரே மகிமை உடையவர்**
**உமை என்றும் ஆராதிப்பேன்**

**கிருபை தந்தீர் உமை ஆராதிக்க**
**பெலனை தந்தீர் உமை ஆராதிக்க**
**ஊழியம் தந்தீர் உமை ஆராதிக்க**
**உமை எந்நாளும் ஆராதிப்பேன்**

**வரங்கள் தந்தீர் உமை ஆராதிக்க**
**மேன்மை தந்தீர் உமை ஆராதிக்க**
**ஞானம் தந்தீர் உமை ஆராதிக்க**
**உமை எந்நாளும் ஆராதிப்பேன்**

**Song No. - 010 Scale – G INDEX**

**கலங்கின நேரங்களில் கை தூக்கி எடுப்பவரே**
**கண்ணீரின் பள்ளதாக்கில் என்னோடு இருப்பவரே**
**உறவுகள் மறந்தாலும் நீர் என்னை மறப்பதில்லை**
**காலங்கள் மாறினாலும் நீர் மட்டும் மாறவில்லை**

**நீங்கதாம்பா எங்க நம்பிக்கை**
**உம்மையன்றி வேறு துணை இல்லை**

**தேவைகள் ஆயிரம் என்னுள் இருப்பினும்**
**சோர்ந்து போவதில்லை என்னோடு நீர் உண்டு**
**தேவையை காட்டிலும் பெரியவர் நீரல்லோ**
**நினைப்பதை பார்க்கிலும் செய்பவர் நீரல்லோ**

**மனிதனின் தூஷணையில் மனமடிவடைவதில்லை**
**நீர் எந்தன் பக்கம் உண்டு தோல்விகள் எனக்கு இல்லை**
**நாவுகள் எனக்கெதிராய் சாட்சிகள் சொன்னாலும்**
**வாதாட நீர் உண்டு ஒருபோதும் கலக்கமில்லை**

**Song No. - 011** **Scale – A** **INDEX**

நல்லவரே என் இயேசுவே
நான் பாடும் பாடலின் காரணரே
நன்மைகள் எதிர்பார்த்து உதவாதவர்
ஏழையாம் என்னை என்றும் மறவாதவர்

துதி உமக்கே கனம் உமக்கே
புகழும் மேன்மையும் ஒருவருக்கே

எத்தனை மனிதர்கள் பார்த்தேனையா
ஒருவரும் உம்மைப் போல இல்லை ஐயா
நீரின்றி வாழ்வே இல்லை உணர்ந்தேனையா
உந்தனின் மாறா அன்பை மறவேனையா

என் மனம் ஆழம் என்ன நீர் அறிவீர்
என் மன விருப்பங்கள் பார்த்துக்கொள்வீர்
ஊழியப் பாதைகளில் உடன் வருவீர்
சோர்ந்திட்ட நேரங்களில் பெலன் தருவீர்

உமக்கே துதி உமக்கே கனம்
உமக்கே புகழ் என் இயேசுவே

**Song No. - 012 Scale – F INDEX**

நான் ஆராதிக்கும் இயேசு இன்றும் ஜீவிக்கிறாரே
அவர் தேவனாயினும் என்னோடு பேசுகிறாரே
அவர் சிந்தின ரத்தம் மீட்பை தந்தது
அவர் கொண்ட காயங்கள் சுக வாழ்வை தந்தது
அவர் என்னோடு இருந்தா ஒரு சேனைக்குள் பாய்வேன்
அவர் என்னோடு இருந்தா ஒரு மதிலை தாண்டுவேன்
உடைந்துப் போன என் வாழவை சீரமச்சாரே
அரணான பட்டணம் போல் மாற்றி விட்டாரே
என் சதத்துருக்கள் பின்னிட்டு ஓடச்செய்தாரே
என் எல்லை எங்கிலும் சமாதானம் தந்தாரே
அவர் செய்த நன்மையை நான் சொல்லி துதிப்பேன்

இரட்சிப்பின் வஸ்திரத்தை உடுத்துவித்தாரே
நீதி என்னும் மார்க்கவசம் எனக்குத் தந்தாரே
கிருபையை தந்து என்னை உயர்த்தி வச்சாரே
என் நாவின் மேலே அதிகாரம் வச்சாரே
அவர் செய்த நன்மையை நான் சொல்லி துதிப்பேன்

உலர்ந்துப் போன என் கோலை துளிர்க்கச் செய்தாரே
ஜீவனற்ற என் வாழ்வில் ஜீவன் தந்தாரே
ஒரு சேனையைப் போல என்னை எழும்பச் செய்தாரே
என் தேசத்தை சுதந்தரிக்கும் பெலனை தந்தாரே
அவர் செய்த நன்மையை நான் சொல்லி துதிப்பேன்

**Song No. - 013** **Scale – G** **INDEX**

**நான் ஒருபோதும் உன்னை கைவிடுவதில்லை**
**என்றுரை செய்தீரன்றோ**
**கடல் ஆழத்திலும் அக்கினி சூளையிலும்**
**உன்னை காத்திடும் பெலன் நானன்றோ**
**விஷ சர்பங்களோ சிங்க கூட்டங்களோ**
**பயம் வேண்டாம் உன் அருகில் நான்**
**என்றுரை செய்தவரை ஆராதிப்பேன்**
**ஆவியில் ஆராதனை**

**ஆறுதல் தர ஒரு வார்த்தை இல்லை**
**என்ன வந்தாலும் பயமே இல்லை**
**மாறாத இயேசு உண்டெனக்கு**
**மனது ஒருபோதும் கலங்கவில்லையே**
**ஏழை எனக்கு இடைக்கலமே**
**அவர் புயலில் என் கன்மலையே**

**நிந்தைகள் உன்னை சூழ்கின்றதோ**
**தம் கரங்கள் என்றும் உயர்ந்திடுமே**
**நல் வசனத்தின் வல்லமையாய்**
**வல்லவரின் சமூகம் நிறைந்திடுமே**
**எலியாவின் தேவன் எங்கே என்ற**
**அற்புதம் நடந்திடுமே**

**Song No. - 014** **Scale – Dm** **INDEX**

**நீரே எல்லாம் நீரே எல்லாம்**
**நீரே எல்லாம் இயேசுவே**
**உயர்வோ தாழ்வோ மரணமோ ஜீவனோ**
**நீரே எல்லாம் இயேசுவே**

**ஆராதிப்பேன் ஆராதிப்பேன்**
**ஆராதிப்பேன் இயேசுவை**
**இன்பமோ துன்பமோ**
**சுகமோ வியாதியோ**
**ஆராதிப்பேன் இயேசுவை**

**நேசிப்பேன் நேசிப்பேன்**
**நேசிப்பேன் இயேசுவை**
**நன்மையோ தீமையோ**
**செல்வமோ வறுமையோ**
**நேசிப்பேன் இயேசுவை**

**பின்தொடர்வேன் பின்தொடர்வேன்**
**பின்தொடர்வேன் இயேசுவை**
**வெற்றியோ தோல்வியோ**
**நிந்தையோ புகழ்ச்சியோ**
**பின்தொடர்வேன் இயேசுவை**

**Song No. - 015** **Scale – F** **INDEX**

ஒருவரும் சேரா ஒளியினில்
வாசம் செய்திடும் எங்கள் தேவனே
மனிதருள் யாரும் கண்டிரா
மகிமை உடையவர் எங்கள் தேவனே

நீரே உன்னதார் நீரே பரிசுத்தார்
நீரே மகத்துவார் உமை ஆராதிப்பேன்

ஏல் ஒலாம் நீரே உமக்கு ஆரம்பம் இல்லையே
ஏல் ஒலாம் நீரே உமக்கு முடிவொன்றும் இல்லையே
உமை அறிந்தவார் இல்லையே
உமை புரிந்தவார் இல்லையே
உமை கண்டவார் இல்லையே
உமக்கு உருவங்கள் இல்லையே

**Song No. - 016** **Scale – C** **INDEX**

**ஒருவரும் சேரக்கூடாத ஒளியில்**
**வாசம் செய்பவரே**
**நீரே பரிசுத்த தெய்வம் – 2**
**நீரே நீர் மாத்ரமே – 2**

**பரிசுத்தர் நீர் பரிசுத்தர் – 2**
**நீரே நீர் மாத்ரமே (தெய்வமே)**

**எல்லாவற்றிலும் நீர் மேலானவர்**
**எல்லோரிலும் பெரியவர்**
**சகலவற்றையும் சிருஷ்டித்தவர்**
**சர்வ வல்லவரே**
**உம்மைப்போல் வேறொரு தெய்வமில்லை**
**நீரே நீர் மாத்ரமே**
**பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரே**
**நீரே நீர் மாத்ரமே**

## Song No. - 017 Scale – E INDEX

பரம குயவனே என்னை வனையுமே
உம் சித்தம் போல் என்னை வனையுமே
உமக்காக என்னை வனையுமே
களிமண்ணான என்னை வனைந்திடுமே

உம் கரத்தாலே மண்ணை பிசைந்து
மனிதனை உருவாக்கினீர்
எந்தனையும் தொட்டு உம் சாயலாக வனையும்
உம்மைப் போல மாற்றிடுமே

உமக்குகந்ததாய் உடைத்து என்னை
உம் உடைமை ஆக்கிடுமே
விருப்பம் போல என்னை விரும்பும் உந்தன் கரத்தால்
அருமையாக வனைந்திடுமே

உமது சித்தத்தின் மையத்தில் என்னை
வைத்து என்றும் வழிநடத்திடும்
உந்தன் சித்தம் செய்ய என்னை தத்தம் செய்தேன்
முழுமையாக அற்பணம் செய்தேன்

**Song No. - 018** **Scale - C** **INDEX**

**பெந்தேகோஸ்தே அனுபவம் தாருமே**
**பின்மாரி ஆவியை ஊற்றுமே**
**மேலான வல்லமை மேலான தரிசனம்**
**மேலான வரங்களை தாருமே**

**என்னை நிரப்புமே என்னை நிரப்புமே**
**என்னை நிரப்பியே அனுப்புமே**
**என் பாத்திரம் நிரம்பி வழிந்திட**
**உம் ஆவியை ஊற்றுமே**

**அனலான ஊழியம் தாருமே**
**அக்கினி ஜீவாலையாய் மாற்றுமே**

**நிழல் பட்டு மரித்தோர்கள் எழும்பிட**
**அற்புதத்தின் அபிஷேகம் தாருமே**

**அக்கினி நாவுகள் தாருமே எனக்கு**
**அதிகார நாவுகள் தாருமே**

**Song No. - 019 Scale - C INDEX**

சிலுவை நாதர் இயேசுவின் பேரொளி வீசிடும் தூய கண்கள்
என்னை நோக்கிப் பார்க்கின்றன
தம் காயங்களையும் பார்க்கின்றன

என் கைகள் பாவங்கள் செய்திட்டால்
தம் கையின் காயங்கள் பார்க்கின்றாரே
தீயவழியில் என் கால்கள் சென்றால்
தம் காலின் காயங்கள் பார்க்கின்றாரே

தீட்டுள்ள எண்ணம் இதயம் கொண்டால்
ஈட்டி பாய்ந்த நெஞ்சை நோக்குகின்றார்
வீண் பெருமை என்னில் இடம் பெற்றால்
முள்முடி பார்த்திட ஏங்குகின்றார்

திருந்திடா பாவிக்காய் அழுகின்றார்
வருந்திடா பிள்ளைக்காய் கலங்குகின்றார்
தம் கண்ணீர் காயத்தில் விழுந்திட
கண்ணீரும் இரத்தமும் சிந்துகின்றார்

அவர் இரத்தம் என் பாவம் கழுவிடும்
அவர் கண்ணீர் என்னை மெருகேற்றிடும்
கலங்கரை விளக்காக ஒளி வீசுவேன்
கலங்குவோரை அவர் மந்தை சேர்ப்பேன்

**Song No. - 020** **Scale – Fm** **INDEX**

**சொந்தம் என்று சொல்லிக் கொள்ள**
**உம்மைவிட யாருமில்ல**
**சொத்து என்று அள்ளிக் கொள்ள**
**உம்மைவிட ஏதுமில்ல**
**இயேசுவே இயேசுவே எல்லாம் இயேசுவே**

**உம் தழும்புகளால் நான் சுகமானேன்**
**உம் வார்த்தையினால் நான் பெலனானேன்**

**உம் கிருபையினால் நான் பிழைத்துக் கொண்டேன்**
**உம் பாசத்தினால் நான் திகைத்துப் போனேன்**

**உம் ஆவியினால் நான் பிறந்துவிட்டேன்**
**உம் ஊழியத்திற்காய் நான் உயிர் வாழ்வேன்**

## Song No. - 021 Scale - C [INDEX]

துதிப்பேன் உம்மை துதிப்பேன்
மகிமை செலுத்தி துதிப்பேன்
துதியும் கனமும் எல்லாம்
உமக்கே தேவா உமக்கே

கிருபைகள் என்னில் பெருக
செய்தீரே ஸ்தோத்திரம்
உம் கரங்களால் என்னை
காத்து கொண்டீரே ஸ்தோத்திரம்

சோதனை என்னில் சூழ்ந்த
போதும் நீர் காத்தீர்
வேதனை என்னில் வந்த
போதும் கிருபை தந்நீர்

கண்ணீர் என்னில் வந்த
போதும் நீர் துடைத்தீர்
என் ஏக்கங்கள் எல்லாம்
நீரே தீர்த்தீர்

## Song No. - 022 Scale – A INDEX

**உம்மை போல இந்த உலகிலே**
**வேறொருவரும் இல்லையே**
**அம்மாவும் நீரே என் அப்பாவும் நீரே**
**என் ஆத்மநேசர் நீரல்லோ**

**அன்பை தேடி நான் அலைந்து திரிந்தேன்**
**மனித உறவுகளால் நொறுக்கப்பட்டேன்**
**வேதனையில் நான் வாடுகையில்**
**உம் அன்பினால் என்னை உயிர்பித்தீர்**

**குழப்பமான சில நேரங்களில்**
**கேள்விகள் அநேகம் எழுகையில்**
**உம் ஞானத்தினால் என்னை வழிநடத்தும்**
**உம் சமூகத்தில் என்னை பெலப்படுத்தும்**

## Song No. - 023 Scale – Cm INDEX

**உம்மைவிட வேறு யாரிடம்**
**பின்னே செல்வேனையா**
**நித்திய ஜீவ வார்த்தைகள்**
**உம்மிடம் உள்ளதையா**

**வேதனையோ சோதனையோ**
**இன்பங்களோ துன்பங்களோ**
**எதுவும் பிரிக்காதையா**
**இயேசுவின் அன்பை விட்டு**

**உறவுகளோ பிரிவுகளோ**
**தனிமையோ தவிப்புகளோ**
**எதுவும் பிரிக்காதையா**
**இயேசுவின் அன்பை விட்டு**

**உயர்வுகளோ தாழ்வுகளோ**
**ஐஸ்வரியமோ ஆஸ்திகளோ**
**எதுவும் பிரிக்காதையா**
**இயேசுவின் அன்பை விட்டு**

**Song No. - 024 Scale – C INDEX**

**உந்தன் சமுகத்தில் வரும்போதெல்லாம்**
**உள்ளம் மகிழ்ச்சியால் பொங்கிடுதே**
**உந்தன் பிரசன்னத்தில் நுழையும் நேரமெல்லாம்**
**ஆவியில் விடுதலை அடைகின்றேன்**

**கருவில் இருந்த நாள் முதலே**
**உமக்காக என்னை உருவாக்கினீர்**
**உந்தனின் பார்வையில் கனமடைய எந்தனின் பெலனானீரே**
**மகிழ்கின்றேன் உம் பிரசன்னத்தில்**
**மறக்கின்றேன் என் கவலைகளை**
**நுகங்கள் நீக்கி நிமிர செய்தீர்**
**கட்டுகள் யாவும் அறுத்து விட்டீர்**
**கருத்தாய் உம்மை துதித்திடுவேன்**
**என் கன்மலை நீர்தானையா**

**மனதின் காயங்கள் ஆறிடுதே**
**மகிழ்ச்சியும் என்னில் பொங்கிடுதே**
**மன்னவா உம்மை உயர்த்திடுவேன் மாறாத என் நேசரே**

**உள்ளம் உடைந்த நேரங்களில்**
**உம்மில் மகிழச் செய்தீரையா**
**உமக்காய் யாவும் சகித்திடவே உன்னத பெலன் ஈந்தீரே**

## Song No. - 025 Scale - C INDEX

உயரமும் உன்னதமுமான
சிங்காசனத்தில் வீற்றிருக்கும்
சேனைகளின் கர்த்தராகிய
ராஜாவை என் கண்கள் காணட்டும்

சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர் – 3
பரிசுத்தர் பரிசுத்தரே

ஒருவராய் சாவாமை உள்ளவர் இவர்
சேரக்கூடா ஒளிதனில் வாசம் செய்பவர்
அகிலத்தை வார்த்தையால் சிருஷ்டித்தவர்
இயேசுவே உம்மையே ஆராதிப்பேன்

ஆதியும் அந்தமுமானவர் இவர்
ஆல்பாவும் ஒமேகாவுமானவர் இவர்
இருந்தவரும் இருப்பவரும்
சீக்கிரம் வரப்போகும் ராஜா இவர்

எல்லா நாமத்திலும் மேலானவர்
முழங்கால்கள் முடங்கிடும் இவருக்குமுன்
துதிகன மகிமைக்கு பாத்திரரே
தூயவர் இயேசுவை உயர்த்திடுவேன்

## Song No. - 026 Scale – A INDEX

வாக்குரைத்தவரே நீர் உண்மையுள்ளவரே
நீர் வாக்கு மாறாதவர் நீர் வாக்கு மாறாதவர்

காலங்கள் மாறலாம் சூழ்நிலை மாறலாம்
மனிதர்கள் மாறலாம் நீரோ என்றும் மாறாதவர்

பொய் சொல்லவோ மனம் மாறவோ
நீர் மனிதர் அல்லவே நீர் மனிதர் அல்லலே

நீர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்
நீர் சொன்னதை செய்து முடிக்க வல்லவர்

**Song No. - 027** **Scale – D** **INDEX**

**இயேசுவே உம்மை உயர்த்திடுவேன்**
**என் நேசரே உம்மை பாடுவேன்**
**நீர் செய்த எல்லா நன்மைகட்காக**
**உமக்கே ஆராதனை**

**நீர் தான் என் தஞ்சமே**
**நீர் தான் என் கோட்டையே**
**துன்ப வேளை தூக்கி என்னை**
**தோளில் சுமந்தவரே**

**உமக்கே ஆராதனை – 4 (ஐயா)**

**நீரே என் ஆதாரமே**
**நீரே என் துணையாளரே**
**சோர்ந்திடும் நேரம் சார்ந்திட**
**உந்தன் கிருபை ஈந்தவரே**

**நீர்தான் என் பெலனே**
**நீர்தான் என் சுகமே**
**கண்ணீர் துடைத்து கவலை போக்கி**
**ஆறுதல் அளிப்பவரே**

## Song No. - 028 Scale – D INDEX

உம் நாமம் எத்தனை இன்பம்
அது மேன்னையும் கூட
பருக பருக தெவிட்டாத
திராட்சை ரசம் போல

அன்பே ஆராதனை
அழகே ஆராதனை

கிச்சிலி மரமே நேச தைலமே
மருதோன்றி பூங்கொத்தே ஆராதனை

இனிமையானவரே மதுரமானவரே
அழகில் சிறந்தவரே ஆராதனை

**Song No. - 029** **Scale – Fm** **INDEX**

**உம்மை நம்பி வந்தேன் நான் வெட்கப்படல**
**உம் தயை என்னை கைவிடல**
**வெறும் கையாய் கடந்து சென்றேன்**
**இரு பரிவாரங்கள் எனக்கு தந்தீர்**

**ஏல்எல்லோகே (3)**
**உம்மை துதிப்பேன்**

**காயப்பட்டு நின்றேன் கண்ணீரில் சென்றேன்**
**கலங்கின எனக்காக இறங்கி வந்தீர்**
**உடன்படிக்கை என்னோடு செய்தீர்**
**இழந்திட்ட யாவையும் திரும்ப தந்தீர்**

**வேண்டினோரெல்லாம் விடைபெற்ற போதும்**
**வேண்டியதெல்லாம் எனக்கு தந்தீர்**
**பரதேசியாய் நான் தங்கினதை**
**சுதந்திரமாக எனக்கு தந்தீர்**

**Song No. - 030** **Scale – A** **INDEX**

**எஜமானனே எஜமானனே**
**உம் சேவைக்காய் எனை அழைத்தீர்**

**அழியும் என் கைகளை கொண்டு**
**அழியா உம் ராஜ்ஜியம் கட்ட**
**பைத்தியமான என்னை தெரிந்தெடுத்தீர்**
**அழியும் என் உதடுகள் கொண்டு**
**அழியா உம் வார்த்தையை சொல்ல**
**எத்தனாய் வாழ்ந்த என்னை தெரிந்தெடுத்தீர்**

**ஆராதிப்பேன் அதை எண்ணியே**
**வாழ்நாளெல்லாம் உமை மட்டுமே**
**ஆராதிப்பேன் – 4**

**என்னில என்ன நன்மை கண்டீர்**
**எனை அழைத்து உயர்த்தி வைத்தீர்**

**உம் சித்தத்தை நான் செய்வதே**
**அனுதினமும் என் போஜனம்**

## Song No. - 031 Scale – C INDEX

**எனக்கு உம்மை விட்டா யாரும் இல்லப்பா**
**உங்க அன்பை விட்டா எதுவும் இல்லப்பா**

**என் ஆசை நீங்கப்பா**
**என் தேவை நீங்கப்பா**
**என் சொந்தம் நீங்கப்பா**
**என் சொத்து நீங்கப்பா**

**காண்கின்ற எல்லாம் ஓர் நாள் கரைந்தே போகுமே**
**தொடுகின்ற எல்லாம் ஓர் நாள் தொலைந்து போகுமே**

**உலகத்தின் செல்வம் எல்லாம் நிலையாய் நிற்குமோ**
**அழியாத செல்வம் நீரே போதும் இயேசுவே**

## Song No. - 032 Scale – A INDEX

நிறைவான ஆவியானவரே
நீர் வரும் போது குறைவுகள் மாறுமே
நீர் வந்தால் சூழ்நிலை மாறுமே
முடியாததும் சாத்தியமாகுமே

நிறைவே நீர் வாருமே
நிறைவே நீர் வேண்டுமே
நிறைவே நீர் போதுமே
ஆவியானவரே

வனாந்திரம் வயல்வெளி ஆகுமே
பாழானது பயிர் நிலமாகுமே

பெலவீனம் பெலனாய் மாறுமே
சுகவீனம் சுகமாய் மாறுமே

## Song No. - 033 Scale – E INDEX

**கர்த்தர் தாமே நம் முன்னே போவார்**
**கர்த்தர் தாமே நம் பின் வந்து காப்பார்**

**நாம் அவர் உடமை இனி இல்லையே தனிமை**
**எங்கும் இனிமை நிதம் காண்போம் புதுமை**

**உதவிடும் கன்மலை இயேசுவை நோக்குவோம்**
**விலகிடார் கைவிடார் தாங்குவார் உறங்கிடார்**

**உயிர் தரும் ஆயனே சுகம் தரும் நேயனே**
**கனிவுடன் நடத்துவார் பரிவுடன் தேற்றுவார்**

**உலகுக்கு வெளிச்சம் நாம் பூமிக்கு உப்பு நாம்**
**மரிக்கும் வித்து நாம் பரமனின் சொத்து நாம்**

## Song No. - 034 Scale - $G_m$ INDEX

உம்மை விட நான் வேறு யாரை நம்புவேன்
ஆதரவாய் வந்தீரே
கரம் பிடித்து நடத்தி சென்றீர்

அன்புக்காய் ஏங்கி நின்றேன்
அணைத்தீரே நன்றி ஐயா
மனிதர் அன்பு மாறிபோகும்
மாறாதென்றும் உந்தன் அன்பு

திக்கற்று இருந்தேனே
கரம் பிடித்தீர் நன்றி ஐயா
என் மேல் உந்தன் கண்கள் வைத்து
ஆலோசனை எனக்கு தந்தீர்

பேதையாய் நான் அலைந்தேன்
கண்டீரே நன்றி ஐயா
நானோ உம்மை அறியவில்லை
என்னை தேடி வந்தீரே

**Song No. - 035** **Scale – F** **INDEX**

**நீர் எனக்குப் போதும் – 4**
**எந்நாளும் எப்போதும் நீரே எந்தன் சொந்தம்**
**இயேசுவே நீர் எனக்குப் போதும்**

**என் தாயும் தந்தையும் நீர்தானே**
**தாங்கிடும் துருகமும் நீர்தானே**
**சுற்றமும் நட்பும் நீர்தானே**
**சுமந்திடும் சுமைதாங்கி நீர்தானே**

**தேற்றிடும் ஸ்நேகிதன் நீர்தானே**
**ஆறுதல் தேறுதல் நீர்தானே**
**ஞானமும் அறிவும் நீர்தானே**
**என் சுகம் பெலனும் நீர்தானே**

**Song No. - 036** **Scale – G** **INDEX**

அழைத்தவரே அழைத்தவரே
என் ஊழியத்தின் ஆதாரமே

எத்தனை நிந்தைகள் எத்தனை தேவைகள்
எனை சூழ நின்றாலும் உமை பார்க்கிறேன்
உத்தம ஊழியன் என்று நீர் சொல்லிடும்
ஒரு வார்த்தை கேட்டிட உண்மையாய் ஓடுகிறேன்

வீணான புகழ்ச்சிகள் எனக்கு இங்கு வேண்டாமே
பதவியின் பெருமைகள் ஒரு நாளும் வேண்டாமே
ஊழியப் பாதையில் ஒன்று மட்டும் போதுமே
அப்பா உம் கால்களின் சுவடுகள் போதுமே

விமர்சன உதடுகள் மனம் சோர வைத்தாலும்
மலை போன்ற தேவைகள் சபை நடுவில் நின்றாலும்
அழைத்தவர் என்றுமே விலகுவதில்லையே
கிருபையும் வரங்களும் குறைவதும் இல்லையே

**Song No. - 037** **Scale - F** **INDEX**

**அழகானவர் இயேசு அழகானவர்**
**இனிமையானவர் இயேசு இனிமையானவர்**
**நேசரானவர் என் சுவாசமானவர்**

**தலைமயிர் சுருள் சுருளானவர்**
**வெண்மையும் சிவப்புமானவர்**

**ரோஜா தோட்டம் லீலி புஷ்பம்**
**என் நேசர் மடியிலே நான் என்றும் தஞ்சம்**

**தாலாட்டுவார் சீராட்டுவார்**
**அணைக்கும் கரங்களால் அரவணைப்பார்**

**Song No. - 038** **Scale – A** **INDEX**

**என்னை கண்டார் (இயேசு) என்னை கண்டார்**
**உள்ளங்கையில் என்னை வரைந்து கொண்டார்**
**கண்ணுக்குள்ளே என்னை வைத்து**
**கடைசி வரைக்கும் காத்துக் கொள்வார்**

**இயேசு என் தேவன் இயேசு என் ஜீவன்**
**இயேசு தான் எனக்கு எல்லாம் எல்லாம்**

**கட்டவிழ்தார் என்னை கட்டவிழ்த்தார்**
**சத்துருவை அவர் துரத்தி விட்டார்**
**சாபத்தையும் வியாதியையும்**
**சாவினால் வென்று ஜெயம் கொடுத்தார்**

**மீட்டுக் கொண்டார் என்னை மீட்டுக் கொண்டார்**
**பாவத்திலிருந்தென்னை மீட்டுக் கொண்டார்**
**சொந்தப் பிள்ளை என்று என்னை**
**உறுதிபடுத்த தன் ஆவி தந்தார்**

**ஜெயம் தந்தார் இயேசு ஜெயம் தந்தார்**
**சத்துருவின் மேல் அவர் ஜெயம் தந்தார்**
**உலகத்தின் மேல் ஜெயம் எடுக்க**
**விசுவாசத்தின் வலிமை தந்தார்**

**Song No. - 039** **Scale – G** **INDEX**

**ஓ எந்தன் உள்ளம் நீர் வந்ததால்**
**என் வாழ்க்கையில் எல்லாம் நிறைந்திருப்பதால்**

**உம்மை துதிப்பேன் நான் உம்மை துதிப்பேன்**
**இன்றும் என்றும் உம்மை போற்றி பாடி துதிப்பேன்**

**கண்மணி போல காத்துக் கொள்வதால்**
**உம் கரங்ளில் என்னை சுமந்து செல்வதால்**

**பெயர் சொல்லி என்னை அழைத்திருப்பதால்**
**உம் கரங்களில் என்னை வரைந்திருப்பதால்**

**ஆவியில் என்னை நிறைத்திருப்பதால்**
**ஆச்சர்யமாக நடத்தி செல்வதால்**

**Song No. - 040** **Scale – A** **INDEX**

**கல்வாரி சிநேகம் கரைத்திடும் என்னை**
**கல்மனம் மாற்றி கரைந்தோடச் செய்யும்**

**காலங்கள் தோறும் காவலில் உள்ளோர்**
**காணட்டும் உம்மை களிப்போடு இன்னமும்**
**குருசதின் இரத்தம் குரல் கொடுக்கட்டும்**
**கும்பிடுவோரை குணமாக்கும் தேவன்**

**இருண்டதோர் வாழ்வு இன்னமும் வாழ்வோர்**
**இனியாவது உம் திருமுகம் காண**
**நாதா உம் சிநேகம் பெருகட்டும் என்னில்**
**என்னைக் காணுவோர் உம்மை காணட்டும்**

**அற்பமான வாழ்வு அற்புதமாய் மாற**
**அனைத்தையும் தந்தேன் ஆட்கொள்ளும் தேவா**
**நான் சிறுகவும் நீர் பெருகவும்**
**தீபத்தின் திரியாய் எடுத்தாட் கொள்ளும்**

**Song No. - 041** **Scale – Fm** **INDEX**

**நீர் திறந்தால் அடைப்பவன் இல்லை**
**நீர் கட்டினால் அதை இடிப்பவன் இல்லை**
**இல்லை இல்லை இல்லை**
**என் வாசலை அடைப்பவன் இல்லை**
**இல்லை இல்லை இல்லை**
**என்னை எதிர்ப்பவன் பூமியில் இல்லை**

**கர்த்தரை போல பரிசுத்தம் உள்ளவர் பூமியில் இல்லையே**
**கர்த்தரை போல வல்லமை உள்ளவர் பூமியில் இல்லையே**
**பலவானின் வில்லை உடைத்து கீழே தள்ளுகிறார்**
**தள்ளாடும் யாவரையும் உயரத்தில் நிறுத்துகிறார்**

**நாசியின் சுவாசத்தால் செங்கடலை**
**அவர் இரண்டாய் பிளந்தவராம்**
**பார்வோன் சேனையை தப்பவிடாமல் கடலில் அழித்தவராம்**
**மரண இருள் சூழ்ந்திடும் வேளையில் பஸ்கா ஆட்டுக்குட்டி**
**வாதை எங்கள் கூடாரத்தை என்றும் அணுகாது**

**தேவனை துதிக்கும் துதியாலே எரிகோ விழுந்தது**
**பவுலும் சீலாவும் துதித்த போது சிறையும் அதிர்ந்தது**
**துதியாலே சாத்தனை கீழே தள்ளிடுவோம்**
**திறந்த வாசல் நம் முன்னே கொடியை ஏற்றிடுவோம்**

## Song No. - 042 Scale – E INDEX

**உனக்காகவே நான் காத்திருக்கிறேன்**
**உள்ளத்தையே நீ தருவாயா**
**உனக்காகவே நான் வந்தேனே**
**உனக்காகவே நான் சிலுவை சுமந்தேன்**
**உனக்காகவே நான் மரித்தேனே**
**உனக்காகவே நான் உயிர்த்தெழுந்தேன்**

**உனக்காகவே மீண்டும் வருகிறேன்**
**உனக்காகவே நான் உனக்காகவே உனக்காகவே**
**உனக்காகவே உனக்காகவே நான் உனக்காகவே**

**பாவத்தை எல்லாம் மன்னித்தேனே**
**துக்கத்தை எல்லாம் சுமந்தேனே**
**நோய்களை எல்லாம் குணமாக்கினேன்**
**கண்ணீரை எல்லாம் துடைத்திட்டேனே**

**உனக்காக பாடுகள் ஏற்றுக்கொண்டேன்**
**உனக்காக காயங்கள் ஏற்றுக்கொண்டேன்**
**உனக்காக தியாகம் செய்திட்டேனே**
**உனக்காக முற்றிலும் அற்பணித்தேன்**

**Song No. - 043** **Scale - A** **INDEX**

உம்மாலே எல்லாம் கூடும்
ஒரு வார்த்தை சொன்னால் போதும்
உங்க கிருபையே உங்க கிருபையே
என்னை தாங்கி நடத்தினதே
அலைமோதும் வாழ்வில் அசையாமல் நிற்க
நங்கூரமாக இருப்பவரே
காற்றையும் கடலையும் அதட்டி அமைதி
படுத்தினதும் உங்க கிருபையே

கரடு முரடான பாதைகளில்
வெளிச்சமாய் என்றும் இருப்பவரே
வழிகளில் எல்லாம் தூதர்கள் அனுப்பி
காப்பதும் உங்க கிருபையே

நெருக்கப்பட்டேன் ஒடுக்கப்பட்டேன்
நிலையில்லாமல் நடந்தேனையா
உருக்கமாய் என்னை தேடி வந்து
காத்ததும் உங்க கிருபையே

வழி அறியாத பாதைகளில் தவறிப் போன வேளைகளில்
சத்திய வழியை எனக்கு காட்டி
நடத்தியதும் உங்க கிருபையே

**Song No. - 044** **Scale – E** **INDEX**

**உம் அழகான கண்கள் என்னை கண்டதாலே**
**முடிந்ததென்று நினைத்த நான் உயிர் வாழ்கின்றேன்**

**யாரும் அறியாத என்னை நன்றாய் அறிந்து**
**தேடி வந்த நல்ல நேசரே**

**தூக்கி எறியப்பட்ட என்னை வேண்டுமென்று சொல்லி**
**சேர்த்துக் கொண்ட நல்ல நேசரே**

**ஒன்றும் இல்லாத என்னை காருண்யத்தாலே**
**உயர்த்தி வைத்த நல்ல நேசரே**

**Song No. - 045** **Scale – G** **INDEX**

**எருசலேமே எருசலேமே**
**கர்த்தர் உன்னை நேசிக்கிறார் எருசலேமே**

**கனி கொடுக்கும் காலத்திலே கொடுத்துவிடு**
**நினையாத நாட்கள் உன் மேல் வருகின்றதே**
**கோழி தன் குஞ்சுகளை கூட்டி சேர்ப்பது போல்**
**கர்த்தரும் உன்னை சேர்த்திடுவார்**

**அத்திமரம் துளிர்க்கும் போது வசந்த காலமே**
**மணவாளன் இயேசுவின் வருகையும் சீக்கிரமே**
**வானத்தின் மத்தியிலே எக்காள தொனியோடு**
**மணவாட்டி உன்னையும் சேர்த்திடுவார்**

## Song No. - 046 Scale – D INDEX

தேவகுமாரா தேவகுமாரா என்ன நினச்சிடுங்க
தேவகுமாரா  தேவகுமாரா கொஞ்சம் நினச்சிடுங்க

நீங்க நினச்சா ஆசீர்வாதம் தான்
என்னை  மறந்தா எங்கே போவேன் நான்

உடைந்த பாத்திரம் நான் அது உமக்கே தெரியும்
தேவன் பயன்னபடுத்துகிறீர் இது யாருக்குப் புரியும்
உதவாத என்னில் நீர் உறவானீர்
நீங்க இல்லாம என் உலகம் விழிக்காதே

உம்மை மறந்து வாழ்ந்தவன் நான் அது உமக்கே தெரியும்
உம்மை மறுதலித்தவன் நான் இதை உலகே அறியும்
உதவாத என்னில் நீர் உறவானீர்
நீங்க இல்லாம என் பொழுது விடியாதே

# Song No. - 047 Scale – C [INDEX]

**என் தனிமையில் என் வேதனையில்**
**நீர் ஒருவரே என்னை தாங்கினீர்**
**என் துயரத்தில் என் அழுகையில்**
**நீர் ஒருவரே என்னை தேற்றினீர்**

**உம்மைப் போல் யாருண்டு**
**என் நேசரே என் இயேசுவே**

**என் உறவுகள் என்னை மறந்தாலும்**
**நீர் ஒருவரே என்னை அணைப்பீரே**
**என் நண்பர்கள் என்னை பிரிந்தாலும்**
**நீர் ஒருவரே என்னோடு இருக்கின்றீர்**

**என் பாவத்தை என் சாபத்தை**
**நீர் ஒருவரே சுமந்து கொண்டீரே**
**உம் பிள்ளையாய் என்றும் உம்முடன்**
**உம் வீட்டிலே என்றும் தங்குவேன்**

**Song No. - 048** **Scale – G** **INDEX**

**எல்லாமே முடிந்ததென்று**
**என்னை பார்த்து இகழ்ந்தனர்**
**இனி என்றும் எழும்புவதில்லை**
**என்று சொல்லி நகைத்தனர்**
**ஆனாலும் நீங்க என்னை**
**கண்டவிதம் பெரியது**
**என் உயர்வின் பெருமை எல்லாம்**
**உம் ஒருவருக்கு உரியதே**

**நீர் மட்டும் பெருகணும் – 3**
**நீர் மட்டும் இயேசுவே**

**உடைக்கப்பட்ட பாத்திரமானேன்**
**உபயோகமற்றிருந்தேன்**
**ஒன்றுக்கும் உதவுவதில்லை**
**என்று சொல்லி ஒதுக்கப்பட்டேன்**
**குயவனே உந்தன் கரம்**
**மீண்டும் என்னை வனைந்தது**
**விழுந்து போன இடங்களில் எல்லாம்**
**என் தலையை உயர்த்தியதே**

**Song No. - 049** **Scale – D** **INDEX**

**உம்மைப் போல யாருண்டு**
**நன்மை செய்ய நீர் உண்டு**
**உம்மைத்தானே நம்புவேன் என் தேவா**
**உம்மைத்தான் எந்தன் வாழ்வில்**
**ஆதாரமாய் நினைத்து உள்ளேன்**
**நீர் இல்லா எந்தன் வாழ்க்கை**
**வீணாய்த்தானே போகுதையா**

**எல்ஷடாய் ஆராதிப்பேன்**
**எலோஹிம் ஆராதிப்பேன்**
**அடோனாய் ஆராதிப்பேன்**
**இயேசுவே ஆராதிப்பேன்**

**கலங்கி நின்ற என்னைக் கண்டு**
**கண்ணீரைத் துடைத்தவரே**
**காலமெல்லாம் கண்மணிபோல**
**கரம்பிடித்து காத்தவரே**

**மரணத்தின் பாதைதனில்**
**மனம் தளர்ந்து நின்ற என்னை**
**மருத்துவராய் நீரே வந்து**
**மறுவாழ்வு தந்தீரையா**

**நன்றி சொல்லி உம்மை பாட வந்தோம்**
**உம் காருண்யத்தை எண்ணி போற்ற வந்தோம்**

**வார்த்தையினால் நீர் சொன்னதெல்லாம்**
**கரங்களினால் இன்று நிறைவேற்றினீர்**
**நன்றி -2 சொல்வோம் உயிர் உள்ளவரை**
**ஒன்றும் குறையாமல் காத்திடும் நல்லவரை**

**காற்றுமில்ல மழையுமில்ல**
**ஆனாலும் வாய்க்காலை நிரப்பினீரே**

**உடன்படிக்கை செய்து நடத்தி வந்தீர்**
**மாறாமல் எப்போதும் காத்துக் கொண்டீர்**

**கைவிடாமல் விட்டு விலகிடாமல்**
**நெருங்கின பாதையிலும் கூட வந்தீர்**

**வெட்கப்பட்ட தேசத்திலே**
**கீர்த்தியும் புகழ்ச்சியுமாக்கினீரே**

**ஆயிரங்கள் பார்த்தாலும்**
**கோடிஜனம் இருந்தாலும்**
**உம்மைவிட (இயேசுவைப் போல்)**
**அழகு இன்னும் கண்டுபிடிக்கலயே**

**நான் உங்களை மறந்தபோதும்**
**நீங்க என்னை மறக்கவில்லை**
**நான் கீழே விழுந்தும் நீங்க என்னை**
**விட்டுக்கொடுக்கலயே......**
**அட மனுஷன் மறந்தும் நீங்க**
**என்னை தூக்க மறக்கலையே**

**உம்மை ஆராதிப்பேன் அழகே**
**என்னை மன்னிக்க வந்த அழகே**
**உம்மை பாட உம்மை புகழ**
**ஒரு நாவு பத்தலையே**

**காசு பணம் இல்லாம முகவரி இல்லாம**
**தனிமையில் நான் அழுதத நீர் மறக்கலையே**
**நான் உடஞ்சு போயி கிடந்து**
**நான் நொருக்கபட்டு கிடந்து**
**என்னை ஒட்டி சேர்க்க**
**நீங்க வந்தது நான் மறக்கலையே**
**என் கண்ணீரை துடைத்துவிட்டத**
**நான் மறக்கலையே**

**Song No. - 052 Scale – Fm [INDEX]**

என் சிறுமையை கண்ணோக்கி பார்த்தவர் நீர்
என் எளிமையில் கைதூக்க வந்தவர் நீர்
துரத்தப்பட்ட என்னை மீண்டும் சேர்த்துக்கொண்டீர்
ஒதுக்கப்பட்ட என்னை பெரிய ஜாதியாய் மாற்றினீர்

பீர்லாகாய் ரோயீ
என்னை காண்கின்ற தேவன் நீர்
பீர்லாகாய் ரோயீ
எங்கள் ஜீவ நீரூற்று நீர்

வனாந்திரம் என் வாழ்வானதே
பாதைகள் எங்கும் இருளானதே
எந்தன் அழுகுரல் கேட்டு
நீரூற்றாய் வந்தவரே

புறஜாதி என்னை தேடி வந்தீர்
சுதந்திரவாளியாய் மாற்றிவிட்டீர்
வாக்குதத்தம் செய்தீர்
நீர் சொன்னதை நிறைவேற்றினீர்

## Song No. - 053 Scale – Fm [INDEX]

பரிசுத்தரே எங்கள் இயேசுதேவா
நானிலத்தில் நீ என்றும் ராஜா
உம்மைப் பாடுவதால் என்னில் தோல்வியில்லை
உம்மைத் துதிப்பதினால் என்னில் குறைவேயில்லை

அல்லேலூயா அல்லேலூயா
உம்மை உயர்த்துவதே எங்கள் நோக்கமையா
உம்மை பாடுவதே எங்கள் மேன்மையையா

நான் கொண்ட திட்டங்கள் சிறிதாயினும் ஐயா
எனக்காய் உம் திட்டங்கள் பெரிதல்லவோ
புழுதியிலிருந்தென்னை உயர்த்தினீரே
ராஜாக்களோடு அமர்த்தினீரே
உந்தன் கிருபைகளை எண்ணி நான் பாடுவேன்
உந்தன் மகிமைதனை தினம் நான் ருசிப்பேன்

ஊழிய எல்லைகள் பெரிதாக்கினீர்
அதில் இராஜாக்கள் உதிக்கவும் உதவிசெய்தீர்
அறியாத ஜாதியை வரவழைத்தீர்
நீர் தந்த வாக்கினை நிறைவேற்றினீர்
வருத்தங்கள் பசிதாகம் ஏற்ப்பட்டாலும்
எங்கள் விசுவாச கேடகம் வீழ்ந்திடாதே
நம்பினோர் நட்டாத்தில் கைவிட்டாலும்
என்னை காப்பற்ற நீர் உண்டு பயமில்லையே

**தாயினும் மேலாய் என்மேல்**
**அன்பு வைத்தவர் நீரே**
**ஒரு தந்தையைப் போல**
**என்னையும் ஆற்றித் தேற்றிடிவீரே**
**என் உயிரோடு கலந்தவரே**
**உம் உறவாலே மகிழ்ந்திடுவேன்**
**உன் மேல் அன்பு வைத்தேன் -நான்**
**உமக்காக எதையும் செய்வேன்**

**கைவிடப்பட்ட நேரங்களெல்லாம்**
**உம் கரம் பிடிப்பேன்**
**எனைக் காக்கும் கரமதை**
**நழுவவிடாமல் முத்தம் செய்வேன்**
**எந்தன் கால்கள் இடறும் போது**
**விழுந்திட மாட்டேன் - உம்**
**தோளின் மீது ஏறிக்கொண்டு**
**பயணம் செய்வேன்**

## Song No. - 055 Scale – G INDEX

தூக்கி சுமப்பீரே வாழ்நாளெல்லாம்
தூக்கி சுமப்பீரே வாழ்நாளெல்லாம்
உந்தன் தோள்களில் நான் கிடப்பேன்
பயமின்றி வாழ்ந்திடுவேன்

குழப்பங்கள் என்னை குழப்பும் போது
குழந்தை போல நான் உம்முன் வருவேன்
போராட்டங்கள் எனை நோக்கி கெர்ச்சிக்கும் போது
யூத ராஜ சிங்கத்திடம் அடைக்கலம் புகுவேன்

பாரங்கள் என்னை அழுத்தும் போது
உம் பாதத்தை நான் பிடித்துக்கொள்வேன்
யாருமின்றி நான் கலங்கும் போது
என் நண்பனாக நீரே என்னை நடத்திச் செல்வீர்

**Song No. - 056** **Scale – C** **INDEX**

**பறந்து காக்கும் பட்சியைபோல**
**எங்களை காக்கும் கர்த்தாவே**
**பட்சிக்க எண்ணும் சத்தரு முன்னே**
**ஆதரவாக இருப்பவரே**
**வாதை என்னை அணுகாமல்**
**கூடாரமாக இருப்பவரே**

**யாவே யாவே - 3**
**யாவே ரோஃபேகா**

**என் சார்ப்பில் நீர் பலியானீர்**
**எந்தன் இடத்தை எடுத்து கொண்டீர்**
**நீர் கொண்ட தழும்புகளால்**
**நிரந்திர சுகத்தை தந்தவரே**

**உம் ஆவி என்னில் வசிப்பதினால்**
**மரித்தவை எல்லாம் உயிர்ப்பிக்குமே**
**உயிர்த்தெழுந்த உம் வல்லமையால்**
**என்னையும் உயிர்பிக்கும் ஆவியே**

**மருத்துவரின் அறிக்கையினை**
**சிலுவையின் இரத்தம் மாற்றிடுமே**
**நீடித்த நாட்களினால் (ஆயுளினால்)**
**எங்களை திருப்தி செய்பவரே**

**Song No. - 057** **Scale – F** **INDEX**

**புயல் காற்றை பூந்தென்றலாய் மாற்றிய தெய்வமே**
**கடல் அலை மாறி மகிழ்வுடனே துறைமுகம் சேருமே**

**வழி தெரியாமல் தடுமாறும் வேளை**
**கலங்கரை விளக்காய் வாருமே**
**தீமைகள் மாற்றி என் சுமைகளை நீக்கி**
**கரையிலே சேருமே – என்னை**

**வாழ்க்கையில் பேய் புயல் வீசிடும் போது**
**அமைதியின் நண்பனாய் வாருமே**
**தேவரீர் என்னுள் இருப்பதனால்**
**என் தலை முடி ஒன்றுக்கும் சேதமில்லை**

**நான் நிற்கும் பூமி நிலைகுழைந்து அழிந்தாலும்**
**என் நம்பிக்கையின் அஸ்திபாரம் அசைந்தாலும்**
**நான் நம்புவதற்கு ஒன்றும் இல்லை என்றாலும்**
**நம்புவேன் என் இயேசு ஒருவரை**

**என் பாதையெல்லாம் அந்தகாரம் சூழ்ந்தாலும்**
**வாழ்க்கை முடிந்தது மறுவாழ்வு இல்லை என்றாலும்**
**என்னை தேற்றுவதற்கு யாரும் இல்லை என்றாலும்**
**நம்புவேன் என் இயேசு ஒருவரை**

**Song No. - 059** **Scale – Fm** **INDEX**

**நம்பிக்கை உடைய சிறைகளே**
**அரணுக்கு திரும்புங்கள்**
**இரட்டிப்பானதை தருகிறார்**
**இன்றைக்கு திரும்புங்கள்**

**நீ விலக்கப்பட்ட உன் ஸ்தானத்திற்கே**
**மறுபடியும்உன்னை அழைக்கின்றார்**
**அவர் சொல்லிட்ட நல்வார்த்தை நிறைவேற்றினார்**

**Aliyah Aliyah Aliyah Aliyah அரணுக்கு திரும்புவோம்**
**Aliyah Aliyah Aliyah Aliyah கர்த்தரை உயர்த்துவோம்**

**கொள்ளை கொண்ட உன் பட்டணத்தை**
**மறுபடியும்குடியேற்றுவார்**
**இராஜாக்கள் உன்னை தேடி வர**
**வாசலை இராப்பகல் திறந்து வைப்பார்**

**(உன்னை)ஒடுக்கினோரை குனிய செய்வார்**
**பரியாசம் செய்தோரை பணிய செய்வார்**
**சத்துருவின் வாசல்களை**
**மேற்கொள்ளும் கிருபையை உனக்குத் தந்தார்**

**தேசத்திலே கொடுமையில்லை**
**அழிவை உன் எல்லையில் கேட்பதில்லை**
**இரட்சிப்பை உனக்கு மதிலாக்கினார்**
**உந்தன் வாசலை துதியாக்கினார்**

**அவர் சொன்னதை சிலுவையில் நிறைவேற்றினார்**

**Song No. - 060** **Scale – D** **INDEX**

**உம் அன்பிற்கு இணை ஏதும் இல்லை அப்பா**
**உம் கிருபைக்கு எல்லையே இல்லை அப்பா**

**ஆராதனை ஆராதனை ஆவியில் ஆராதனை**
**ஆராதனை ஆராதனை என் ஜீவனே என் நேசரே**

**உலகத்தின் பின்னால் ஓடிய என்னை**
**அன்பினால் அணைத்தவரே**
**ஒன்றுக்கும் உபயோகம் இல்லாத என்னையும்**
**தேடியே மீட்டவரே**

**சாத்தானின் பிள்ளையாய் வாழ்ந்து வந்த என்னை**
**அன்பினால் மீட்டவரே**
**சாபத்தை மாற்றி உந்தனின் அன்பால்**
**நிறைத்தென்னை மீட்டவரே**

**ஆராதனை ஆராதனை ஆவியில் ஆராதனை**
**ஆராதனை ஆராதனை என் ஜீவனே என் நேசரே**
**என் ராஜனே என் அன்பரே**
**உன்னதரே உயர்ந்தவரே**
**கன்மலையே என் நம்பிக்கையே**

**Song No. - 061** **Scale – C** **INDEX**

**சிலுவை அன்பை உணராயோ**
**இயேசுவின் பாடுகள் அறியாயோ**
**நல் மீட்பர் உன் பாவம் நீக்கி சுத்திகரிக்க**
**மரித்தார் நீ ஓடி வாராயோ**
**ஓடி வா உன் நேசரண்டையோ**
**பாவம் தீர்க்கும் ஊற்றினண்டையே**
**போக்குவார் உன் பாவக் கறையை**
**அளிப்பார் சமாதானத்தையே**
**நீ சீர்கெட்டு போனதினாலே**
**பாவ ரோகங்களும் சாபங்களும் சூழ்ந்ததே**
**யாவும் தன்மேல் சுமந்தே உன்னை ஆசீர்வதிக்க**
**மரித்தார் நீ ஓடிவாராயோ**

**இரத்த காயங்கள் குத்துகளும் நிறைந்து**
**முள்முடியும் சிரசினில் அறைந்து**
**கை கால்கள் கூர் ஆணிகளால் அடிக்கப்பட்டு**
**மரித்தார் நீ ஓடிவாராயோ**
**சிலுவை அன்பை உணர்ந்தேனே**
**இயேசுவின் பாடுகள் அறிந்தேனே**
**நல் மீட்பர் என் பாவம் நீக்கி சுத்திகரிக்க**
**மரித்தார் நான் ஓடி வந்தேனே**
**ஓடிவந்தேன் என் நேசரண்டையோ**
**பாவம் தீர்க்கும் ஊற்றினண்டையே**
**போக்கினார் என் பாவக் கறையை**
**அளித்தார் சமாதானத்தையே**

## Song No. - 062 Scale – Em [INDEX]

**உம்மை பாடாத நாட்களும் இல்லையே**
**உம்மை தேடாத நாட்களும் இல்லையே (2)**

**உம்மையல்லாமல் யாரை நான் நேசிப்பேன் (2)**
**உமக்காக அல்லாமல் யாருக்காக வாழுவேன்**
**நம்புங்கப்பா உந்தன் பிள்ளையை (2)**

**வெள்ளியை புடமிடும் போல என்னை புடமிட்டீர் (2)**
**அதனால் நான் சுத்தமானேனே**
**பொன்னாக விளங்கச் செய்தீரே (2)**

**பொருத்தனைகள் நிறைவேற்றி ஸ்தோத்திரங்கள் செலுத்துவேன் (2)**
**ஆராதித்து உம்மை உயர்த்துவேன்**
**நம்புங்கப்பா உந்தன் பிள்ளையை (2)**

**என் அலைச்சல்களை எண்ணினீர் கண்ணீரும் துருத்தியில் (2)**
**வைத்து நன்மை தருபவரே**
**நம்புவேன் நான் எல்லா நாளிலும் (2) – உம்மை**

**Song No. - 063 Scale – Cm INDEX**

உங்க கிருபை இல்லாம வாழ முடியாதையா
உங்க கிருபை இல்லாம வாழ தெரியாதையா
நான் நிற்பதும் உங்க கிருபைதான்
நான் நிலைப்பதும் உங்க கிருபைதான்
நான் நிற்பதும் நிலைப்பதும உங்க கிருபைதான் அப்பா
உங்க கிருபை இல்லாம வாழ முடியாதையா
முடியாதப்பா வாழ தெரியாதப்பா – 2

காலை எழுந்தவுடன் புது கிருபை தாங்குது
வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சிக்குள்ளே நடத்துது
நிர்முலமாகாமலே இதுவரை காத்தீரையா
பெலவீன நேரங்களில் உம் கிருபை தாங்கினதையா
என் அரணும் என் கோட்டை உயர்ந்த அடைக்கலம் நீரே

உமது கிருபையினால் சத்துருக்களை அழித்திடுவீர்
ஆத்துமாவை சஞ்சலப்படுத்தும் யாவரையும் சங்கரிப்பீர்
உமது அடிமை நான் ஐயா எனது தெய்வம் நீரையா
நான் நம்பும் கேடகம் நீரே எனது கோட்டை நீரையா
என் கோட்டை என் துருகம் நான் நம்பும் கேடகம் நீரே

எப்பக்கம் நெருக்கப்பட்டும் ஒடுங்கி நானும் போவதில்லை
கிருபை மேல் கிருபை தந்து காலூன்றி நடக்கச்செய்தீர்
மான்களின் கால்களைப்போல பெலனாய் ஓடச் செய்தீரே
உயர்ந்த ஸ்தலங்களில் என்னை திடனாய் நடக்கச் செய்தீரே
என் அரணும் என் கோட்டை உயர்ந்த அடைக்கலம் நீரே

**Song No. - 064** **Scale – Dm** **INDEX**

**தனிமையின் பாதையில்**
**தகப்பனே உம் தோளில்**
**சுமந்ததை நான் மறப்பேனோ**

**ஆ.. எத்தனை அன்பு என் மேல்**
**எத்தனை பாசம் என் மேல்**
**இதற்கு ஈடு என்ன தருவேன் நான்**

**சோர்ந்து போகும் நேரங்களெல்லாம்**
**மார்போடு அணைத்துக் கொண்டீரே**
**கண்ணீரை கணக்கில் வைத்தீரே**
**ஆறுதல் எனக்கு தந்தீரே**

**உடைக்கப்பட்ட நேரங்களெல்லாம்**
**அடைக்கலம் எனக்கு தந்தீரே**
**தடுமாறும் வேலையிலெல்லாம்**
**தகப்பன் போல சுமந்து சென்றீரே**

**பலர் சபித்து என்னை தூற்றும்போதெல்லாம்**
**என்னை ஆசீர்வதித்து உயர்த்தி மகிழ்ந்தீரே**
**உம் உள்ளத்துக்குள் என்னை வரைந்தீரே**
**இதற்கு ஈடு என்ன தருவேன் நான்**

## Song No. - 065 Scale – A INDEX

சேராபீன் தூதர்கள்
போற்றிடும் பரிசுத்தர்
மகிமையை உடையாக
அணிந்துள்ள மகத்துவர்

பாத்திரர் நீரே பரிசுத்தர் நீரே
ஸ்தோத்திம் பாடியே புகழ்ந்திடுவேன்

தழும்புள்ள கரங்களினாலே
காயங்கள் ஆற்றிடுவீரே
கண்ணீரை துருத்தியில் வைத்து
பதில் தரும் நல்லவரே

சுத்தர்கள் தொழுதிடும் நாமம்
பரலோக தகப்பனின் நாமம்
ராஜ்ஜியம் வல்லமை கனமும்
உமக்கே சொந்தமாகும்

**Song No. - 066** **Scale – C** **INDEX**

**நேசப் பாட்டு பாடப்போறேன் இயேசைய்யா கூட**
**ஆசப் பாட்டு பாடப்போறேன் இயேசப்பா கூட**

**இயேசுவே என் இயேசுவே**
**என் அன்பே என் ஆருயிரே**
**உம்மில் நான் என்னை மறந்தேனே**

**பெயர் சொல்லும் போதும் கண் விழி மூடும் போதும்**
**என் இதயத்தில் உந்தன் சமுகம் ஆனந்தம்**
**மலை போல் உயரம் உம் அன்பின் உயரம்**
**மலையை காட்டிலும் பெரிதல்லவோ**

**என் கண்ணீரின் நேரத்தில் உம் தோளில் சாயும் போதினில்**
**உம் செயல் நினைத்தால் கண்ணீரும் ஆனந்தம்**
**உயிரின் உயிராய் என்னில் நீர் இருப்பதினால்**
**உலகம் வெறுத்தாலும் நீர் மட்டும் போதும்**

**உலகத்தின் ஆசைகள் இழுக்கின்ற வேளையில்**
**என் கண்ணீரின் விழிகள் என்னை அழைக்குதே**
**திரும்பும் திசை எல்லாம் உம் முகம் மட்டும் தெரிகிறதே**
**உந்தன் நேசம் என் பெயர் மறக்க செய்கிறதே**

**Song No. - 067** **Scale – E** **INDEX**

**உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும்**
**கொடிய வேதனையோ மகனே**
**உன் சுகவாழ்வு இன்று துளிர்த்தது**
**புது வாழ்வு இன்று வந்தது**
**தேவரீர் எழுந்தருளி சீயோனுக்கு தயை செய்து**
**அதற்காய் குறித்த நேரமும் (வேளையும்) வந்தது**
**உன் சுகவாழ்வு இன்று துளிர்த்தது**
**புது வாழ்வு இன்று வந்தது**

**இலையும் இல்லாம கனியும் இல்லாம**
**பட்டுபோன மரம் போல ஆனாயோ**
**பச்சையான மரமாக மாற்றிடுவார் நம் தேவன்**
**பூத்து காய்த்து உன்னை  நிரப்பச் செய்வார்**

**உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கிலே**
**உயிரற்று நீயும் போனாயோ**
**மகிமையின் ஆவியாலே உன்னை அவர் நிரப்பிடுவார்**
**காலூன்றி நீயும் எழுந்திடுவாய் (நடந்திடுவாய்)**

**கொடியவரின் சீரல் மோதி அடிக்கையிலே**
**பெலனற்று நீயும் போனாயோ**
**ஏழைகளின் பெலனுமவர் எளியவரின் திடனுமவர்**
**வெயிலுக்கு ஒதுங்கி நிற்கும் நிழலாவார்**